தமிழகச் சட்டப் பேரவை

திங்கட்கிழமை, மார்ச் 27, 1967.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக் குறி * இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : முதல் அலுவல் "கேள்விகள் பதில்கள்". மாண்புமிகு அமைச்சர்கள் பதில் கூறுவதற்குக் கேள்விகள் இன்றைக்கு இல்லை. நாளைக்கு இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

1. கவன ஈர்ப்பு—கோவை பஞ்சாலைகளில் கதவடைப்பு.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, சட்டமன்றப் பேரவை 41-வது விதிக்கிணங்க அவசரப் பொது முக்கியமான காரியம் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் ஹெச். வி. ஹாண்டே அவர்களும், திரு. சு. துரைசாமி அவர்களும் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சபாநாயகர் அவர்களே, சட்டசபை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தை மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன் :—

"தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாகக் கோவை மாவட்டத்திலும், பஞ்சாலைகள் மூடிக்கிடக்கின்ற நிலை காரணமாக சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், அவைகளை உடனடியாகத் திறப்பது பற்றியும் அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றியும்."

திரு. சு. துரைசாமி : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, "தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாகக் கோவை மாவட்டத்திலும், பஞ்சாலைகள் மூடிக் கிடக்கின்ற நிலை காரணமாக சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், அவைகளை உடனடியாகத் திறப்பது பற்றியும் அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றியும்" அவசரப் பொது 'முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

* THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Mr. Speaker, I wish to make the following statement :—

Since the middle of last year, the textile industry in the State has been passing through a difficult time on account of the following factors :—

(i) Accumulation of cloth and yarn due to the unprecedented glut in the market;

(ii) Non-availability of cotton at reasonable prices;

(iii) Financial difficulties arising out of credit squeeze;

(iv) Unprecedented and prolonged power cut in the State for a greater part of last year.

This state of affairs affected the working of a number of mills, particularly the financially weak and uneconomic units. The ways and means position of these mills became very difficult and they found it hard even to pay the wages of the workers. When the mills complained of this position, the Government in September 1965 ordered the postponement of collection of electricity charges from them, by a month. But as the situation worsened, more than a dozen mills, most of them in the Coimbatore district were closed down. Naturally, the closure of these mills caused anxiety to the Government. Though this was an industry-wise malaise, and the State Government could not take up any responsibility for opening these mills or taking them over, the Government are trying to help the industry and the workers and are taking all possible steps in this direction. A series of discussions with the representatives of the mill-owners and the trade unions were held at ministerial level and this was followed up by the Commissioner of Labour who also held discussions with the management and the labour of various mills. These problems were also reviewed at the meeting of the State Labour Advisory Board. As a result of these efforts, most of the mills which had been under closure due to labour difficulties or temporary financial difficulties reopened. In respect of other mills which had serious financial difficulties, the Government constituted an *ad hoc* technical committee consisting of the Director of Handlooms, Madras and the representatives of South India Textile Research Association and Southern India Millowners' Association to make a close study of the technical and financial position of the mills. The Committee went into the affairs of five mills and submitted its report. Based on the recommendations of the Committee, the Government have offered to extend guarantee assistance to the tune of Rs. 25.85 lakhs to Messrs. Cambodia Mills, Janardhana Mills Limited and the Githanjali Mills, Limited. The mills are negotiating the terms and conditions of the loans with their bankers. The Committee has not recommended any assistance to Sri Palamalai Ranganathar Mills and Kaleswarar Mills Limited, as their liabilities are twice as much as their assets.

1967 மார்ச் 27] [Thiru V. R. Nedunchezhian]

The Southern India Millowners' Association have also represented that as a measure of relief to the managements of the mills, they may be permitted to pay in instalments commencing from the middle of 1968, the dues towards Employees' Provident Fund, Employees' State Insurance, Electricity dues, etc. I propose to discuss these requests with the representatives of the Southern India Millowners' Association and the officials concerned on 31st March 1967. A conference with the representatives of the trade unions and the managements of the textile industry is also to be held on 3rd April 1967 to discuss the situation.

Thus, it will be seen that all practicable steps have been and are being taken by the Government to mitigate the hardships of the labour affected by the closure of the mills.

2. அறிவிப்புகள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : 1967-68-வது ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவிற்கு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி) இப்பேரவையின் பதினைந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு பதினைந்து உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களாவன :—

(1) திரு. எம். சுரேந்திரன்
(2) திரு. செ. பாலசுப்பிரமணியன்
(3) டாக்டர் எச். வி. ஹாண்டே
(4) திரு. ஆ. கு. சுப்பையா
(5) திரு. எ. சிதம்பரநாத நாடார்
(6) திரு. எஸ். ராமலிங்கம்
(7) திரு. கே. விநாயகம்
(8) திரு. எஸ். ராமச்சந்திரன்
(9) திரு. மு. வேதாசலம்
(10) திரு. சி. வி. எம். அண்ணாமலை
(11) திரு. எஸ். முத்துலிங்கம்
(12) திரு. வீ. மலைக்கண்ணன்
(13) திரு. மு. சின்னசாமி
(14) திரு. மு. ச. சிவசாமி

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1967–68-வது ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதாக நான் அறிவிக்கிறேன்.